காளமேகப் புலவர்

இயற்றிய

சித்திர மடல்

குறிப்புரை :

புலவர் சாந்த சுந்தரனர்

★

தலைவணை

தி… பாவை என்னும் …ந்திய

… என்னும் வள்…

சைவசித்தா… அப்புக் கழகம், லிமிடெட்,

79, பிரகாசம் சாலை, சென்னை-1.

1978

புலவர் சாந்த சுந்தரனார்

© 1978 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

கிளைகள் :
திருநெல்வேலி-6. மதுரை-1. கோயமுத்தூர்-1.
கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2.

கழக வெளியீடு : கசுஅ0

முதற் பதிப்பு : மே, 1978

O31, 1I60,1
N78

CHITHIRA MADAL

அப்பர் அச்சகம், சென்னை-1. (I/-)

பதிப்புரை

'சித்திரமடல்' என்னும் இந்நூல் 174 கண்ணிகளையுடையது இந்நூலை இயற்றிய காளமேகப் புலவர் வாழ்ந்த காலம் கி. பி. 15ஆம் நூற்றாண்டு என அறிஞர் அறுதியிட்டுள்ளனர். அவர் காலத்தில் திருமலைராயன் என்னும் அரசன் இருந்ததாகத் 'தனிப்பாடல் திரட்டு' என்னும் நூலால் அறிகின்றோம். இவர் ஆசுகவியாய் இருந்தார். மற்றவர்கள் கொடுத்த கருத்துக்களை அமைத்து உடனுக்குடன் பாடுவதே ஆசுகவியின் இலக்கணமாகும். இவர் இயற்றிய இரட்டுற மொழிதலாகிய பாடல்கள் இன்சுவையுடன் விளங்குவது யாவரும் அறிந்த உண்மையாகும். காளம்-கருப்பு கருப்பு நிறத்தையுடைய மேகம் மழை பொழிவது போலக் கவிமழை பொழியும் சிறந்த புலவராதலின் காளமேகம் என்னும் பெயர் பெற்றார்.

காளமேகப்புலவர் திருமலைராயன் என்னும் அரசனைக் காணச் சென்றபோது, அவன் தன்னுடைய அரசிருக்கையில் தன்னுடன் அப் புலவரை அமருமாறு செய்தான். அப்பொழுது கவிஞராகிய காளமேகம்,

" வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு "

என்னும் செய்யுளை இயற்றினார். அதன்கண்,

"—வெள்ளை

அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்''

எனக் கலைமகளைப் பாராட்டிக் கூறியதோடு அரசன் தமக்குச் சரியா சனம் அளித்துச் சிறப்பித்த பெருமையைக் கூறுகின்றார். சொல் லாற்றல் மிக்க புலவர்களைப் பாராட்டுவது அக்கால மன்னர்களிடத் தில் காணப்பட்ட சிறப்பியல்பு.

இந்த நூலில் பாட்டுடைத் தலைவனாகப் பாராட்டப்படுபவன் சோழ நாட்டில் உள்ள பர்வை என்னும் ஊருக்குத் தலைவனாகிய தெய்வங்கள் பெருமாள் என்னும் வள்ளலாவான். இவனைப் பற்றிய வரலாறு வேறு நூல்களால் அறியப்படாவிடினும் பெரும்புகழ் பெற்ற காளமேகப் புலவரின் நாவினாற் போற்றப்படும் சிறப்புப் பெற்றதே பெரும் பேறாகும்.

மடல் ஏறுவோன் தலைவியின் உருவத்தை ஓர் படத்தில் எழுதிக் கையிற் பிடித்துக் கொள்வது வழக்கம். அவ்வாறே இத் தலைவனும் 'என்னை வருந்துமாறு செய்த தலைவியின் அடி முதல் தலைவரைப் (பாதாதி கேசத்தையும்) எழுதி, கற்பனையாக எழுதிய சித்திரமடல் உண்டாக்குவேன் என்று கூறுகிறான். இந்த நூலின் உயிர் நிலையாக இருக்கும் மடலேறும் பகுதியில் 'சித்திரமடல் உண்டாக்குவதே' சிறப்புடைச் செயலாகக் குறிக்கப்பட்டுள்ளது. அதனையே இந்நூலுக்குப் பெயராக ஆசிரியர் குறித்துள்ளார்.

'மடற்கோலம்' என்னும் பகுதியில் தலைவன் 'சித்திரமடல் எழுதுதல் முதன்மையாகவும் எலும்பு, எருக்கு இவற்றாலாகி மாலைகளையணிந்து சிவபெருமானைப் போல விளங்குதல் அடுத்தப யாகவும் கூறியுள்ளார். போர்க்களத்திற் புகுந்து வீரப்போர் செய்து வீரமரணம் அடைந்த சிறந்த வீரனுடைய எலும்பை எடுத்து மாலை யாக அணிவதே மடலேறுவோர்க்குச் சிறப்புத்தருவதென்பது இ நூலால் விளங்குகிறது. 170ஆவது கண்ணியில் 'தெய்வங்க பெரு மாள்' எனப் பாட்டுடைத் தலைவன் பெயர் கூறப்பட்டுள்ளது. 'சினக்கலியாகிய வறுமையை நீக்குபவன்' எனவும், 'மண்டலீகரன் எனவும் அவன் புகழப்பெற்றுள்ளான். மடலேறும் தலைவனுடை உறுதிப்பாடு முடிவில் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய சிறந்த நூல் கிடைப்பது அரிதாயிருக்கின்ற சொற்சுவை, பொருட்சுவைமிக்க சிற்றிலக்கியங்களை மறைந் போகாமற் காத்தல் வேண்டும். என்னும் குறிக்கோளை கழகத்தின் வாயிலாக இப்பொழுது வெளியிடப்படுகின்றது. கழ விரும்பியபடி இதற்குச் சிறந்த குறிப்பு எழுதி உதவிய பு சாந்த சுந்தரனார் அவர்களுக்குக் கழகத்தின் நன்றியுரியதா இது சிற்றிலக்கியப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வெளியிடப்பெ இரண்டாவது நூலாகும்.

சிற்றிலக்கியப் பாதுகாப்பினை மேற்கொண்டு இத்த நூல்களை வெளியிடும் கழகத்தின் குறிக்கோள் நிறைவேறத் தமி பேரறிஞர்களும் தமிழ் அன்பர்களும் இந்நூலினை வாங்கிப் பயன் பெற வேண்டுகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

நூலின் அமைப்பும் சிறப்பும்

தலைமகள்பாற் களவு முறையில் காதல்கொண்ட தலைமகன் அவளை அடையப்பெறாது பெருந்துயருழந்து அவளொடு தான் கொண்ட காதலை யாவருமறியப் புலப்படுத்துவானாய் அவளுடைய உருவை ஒரு கிழியில் எழுதி ஓர் அம்பலத்தின்கண் வைத்துப் பனைமடலான் அமைக்கப்பட்ட குதிரையில் ஊர்வேன் என்று அறிவித்து அவ்வாறு செய்தல் மடலேறுதல் எனப்படும். இதுபற்றித் தஞ்சைவாணன் கோவையுரையில் பின்வருமாறு காணப்படுகின்றது.

“மடலேறலாவது தலைவன் ஒவ்வாக் காமத்தால் பனங்கருக்காற்குதிரையும், பனந்தருவிலுள்ளவற்றால் வண்டில் முதலியவையும் செய்து அக் குதிரையின்மேல் ஏறுவது. மடலேறுவோன் திகம்பரனாய், உடலெங்கும் நீறுபூசிக் கிழி ஓவியர் கைப்படாது தானே தீட்டிக் கிழியின் தலைப்புறத்தில் அவள் பேரை வரைந்து கைப்பிடித்து, ஊர்நடுவே நாற்சந்தியில் ஆகாரம் நித்திரையின்றி, அக் கிழிமேற் பார்வையுஞ் சிந்தையும் இருத்தி, வேட்கை மயத்தனாய் வேறு உணர்வின்றி, ஆவூரினும் அழல்மேற்படினும் அறிதலின்றி, மழை வெயில் காற்றால் மயங்காதிருப்புழி, அவ்வூருள்ளார் பலருங் கூடிவந்து நீ மடலேறுதியோ? அவளைத் தரும் சோதனை தருதியோ? என்றவழி இயைந்தானாயின், அவனுக் கறிவித்து அவனேவலால் ஏறும் முறையே பூளை, ஆவிரம்பு, எருக்கு இவற்றால் கட்டிய மாலையணிந்துகொண்டு குதிரைமாவிலேற, அவ் வடத்தை வீதியில் ஈர்த்தலும், அவ்வுருளை கொண்டோடும்பொழுது, பனங்கருக்கு அறுத்த இடமெல்லாம் இரத்தந் தோன்றாது வீரியந்தோன்றின், அப்போது அவளை அலங்கரித்துக் கொடுப்பது; இரத்தங் கண்டுழி அவனைக் கொலை செய்து விடுவது. இவை புலவரால் நாட்டிய வழக்கென்று உணர்க!”

மடலேறுதல் என்னுந் துறையை அடிப்படையாகக் கொண்டு 'மடல்' என்னும் சிற்றிலக்கியவகை பிற்காலத்தில் உருவாகியது. அது கனவிற் கண்ட பெண்ணைக் காமுற்ற தலைவன் அவளை அடையப்பெறுவிடின் உயிர்விடுவேன், என்னுங் கருத்தமையப் பாடுவதாகிய உலாமடலும், உறுதிப் பொருள் நான்கினும் இன்பமே சிறந்ததென்று வலியுறுத்துப் பாடுவதாகிய வளமடலும் என மடல் இருவகைப்படும். இது கலிவெண்பாவினுல் பாடப்படுவது மரபு. ஆண்பாலருக் குரியதாகவே இம் மடலூர்தலைப் பழைய நூல்கள் வகுத்துரைப்பினும், பிற்காலத்துச் சமய நூல்கள் கடவுண்மாட்டுக் காதல் கொண்ட மானிட மகளிருக்கும் ஏற்றி இலக்கியஞ் செய்வாராயினர். இது திருமங்கையாழ்வார் இயற்றிய 'பெரிய திருமடல்' 'சிறிய திருமடல்' என்னும் வளமடல்களான் அறியப்படும்.

பாவன்மை மிக்கவரான காளமேகப் புலவரான் இயற்றப் பட்ட உலாமடலாகிய 'சித்திர மடல்' என்னும் இச் சிற்றிலக்கியம் பாவை என்னும் ஊரில் வாழ்ந்த தெய்வங்கள் பெருமாள் என்னும் வள்ளலைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நூற்று எழுபத்து நான்கு கண்ணிகளால் புனையப்பட்டுள்ள கலிவெண் பாட்டாகும்.

கிளவித் தலைவன் பெண்ணொருத்தியைக் கண்டு காமுற்றுக் கனவின்கட்கூடி விழித்தெழுந்து அவளைக் காணப்பெறுஞய் வள்ளற் பெருமானாகிய தெய்வங்கள் பெருமாளது பாவை நகர்த் தெருவின்கண் மடன்மா ஊர்ந்து அவளை அடையப் பெறுவதாகக் கூறும் பொருளமைப்புடையது இந்நூல்.

பின்னெழுந்த 'வருணகுலாதித்தன் மடல்', 'தாயுமானுர் மடல்' முதலியவற்றிற் காணப்படுமாறு இதன்கட் பாட்டுடைத் தலைவனின் பத்துறுப்பு (தசாங்க) வண்ணனை இடம் பெறவில்லை. காளமேகப் புலவர்க்கே யுரிய சீரிய பாநடை இந்நூலின்கண் சிறப்புற விளங்குகின்றது.

உ

சித்திர மடல்

காப்பு

சீரார்தென் பாவைத்தெய் வங்கள்பெரு மாள்மீதில்
பாராய்ந்து சித்ரமடல் பாடவே—ஏரான
கொம்பன் உமையாள் குமாரன் உடன்பிறந்த
கம்பமத யானைமுகன் காப்பு.

நூல்

தலைமகளின் சிறப்பு

1. வையம் படைத்தருள மாபா ரதியுடனே
மெய்யம் புயத்தவிசில் வீற்றிருந்தோன்—ஐயம்பு

சித்திரமடல்: அழகிய பாநலம் அமைந்த மடலென்னுஞ் சிற்றிலக்கியம்.

காப்பு: பாராய்ந்து - பார் ஆய்ந்து - பாரின்கண் மடலுக்குரிய இலக்கணங்களையெல்லாம் ஆராய்ந்து.

உமையாள் குமாரன் உடன்பிறந்த என்பதற்கு, உமையவளுக்கு மகனாகிய குமாரக் கடவுளுக்கு உடன்பிறந்தவனாகத் தோன்றிய எனப் பொருள் கொள்க.

தெய்வங்கள் பெருமாள் என்பது திருமாலுக்கு வழங்கும் பெயர்கள் பலவற்றுளொன்று. இப் பெயர் கொண்ட வள்ளல் சோழநாட்டைச் சார்ந்த பாவையென்னும் ஊரில் வாழ்ந்திருந்தார். அவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இந் நூல் இயற்றப்பட்டது.

1. வையம் - உலகம். மாபாரதி - பெருமை பொருந்திய கலைமகள். அம்புயத் தவிசு - தாமரையாகிய இருக்கை. மெய்யம்புயத்தவிசு என்பதற்குத் தாமரையைத் தன்மெய்யாகக் கொண்ட இருக்கையென்று பொருளாகும். உலகைப் படைக்கக் கலைமகளுடன் தாமரையிருக்கையில் வீற்றிருக்கும் பிரமன். ஐயம்பு - மன்மதனுடைய மலர்க்கணைகள் ஐந்து. அவையாவன: தாமரை, அசோகம், குவளை, மா, முல்லை ஆகிய மலர்களாம்.

2. பூத்தெரித்த தம்பியெனும் போர்வேளைச் சங்கரனார்
பார்த்தெரித்த பண்டைப் பழிவாங்க,—ஏத்தரிய

3. அந்தவேள் தன்னுடனே அம்புவியில் விட்டதென
முந்தவே வந்துதித்த மோகனப்பெண்;—இந்திரற்கும்

4. கிட்டாத இந்திராணி; கெம்பீர வேலவர்க்கும்
எட்டாத பச்சை இளந்தோகை; — கட்டாத

5. பூமாலை; தட்டாத பொற்பாவை; கற்பகப்பூ
மாமாலை யிற்பிறவா வாசவண்டு;—காமாரி

---

2. ஐயம்பு பூத்தெரித்த தம்பி - ஐ பூ அம்பு தெரித்த - ஐந்து மலர்க் கணைகளைத் தெரிந்தெடுத்த. தம்பி - பிரமனுக்குத் தம்பி. மன்மதன் திருமாலுக்கு மகன். பிரமன் திருமாலின் திருவுந்திக் கமலத்தில் தோன்றியவன். ஆதலின், மன்மதன் பிரமனுக்குத் தம்பியாவான். போர்வேள் - காமப்போரை விளைவிக்கும் பெருமகனாகிய மன்மதன். சங்கரனார் பார்த் தெரித்த பழி - சிவபெருமான் நெற்றிக் கண்ணால் எரித்து அழித்த பழி.

3. தன் தம்பியாகிய மன்மதனைச் சிவபெருமான் எரித்தழித்த பழி தீர்த்துக்கொள்ளும் பொருட்டுப் பிரமன் அம் மன்மதனுக்கு உதவியாகப் படைத்து உலகிற்கு அனுப்பிய அழகிய பெண்.

4. இந்திராணியைக் காட்டிலும் அழகிற் சிறந்தவள். வேலவர்க்கும் எட்டாத பச்சை இளந்தோகை. முருகனுக்கு ஊர்தியாக வாய்த்த மயிலைக் காட்டிலும் அழகிய சாயலையுடையவள். இனி, முருகனுக்கு மனைவியாக வாய்த்த பச்சிள மயில்போன்ற வள்ளியினும் அழகுமிக்கவள் எனலுமாம்.

5. கட்டாத பூமாலை - இவள் உடலினுறுப் பொவ்வொன்றும் மலர் போல் தோன்றுதலின் கட்டாத பூமாலை. தட்டாத பொற்பாவை - சிற்பியாகிய கொல்லனால் தட்டிச் செய்யப்படாத பொற்பதுமை. கற்பகப் பூங்கொத்தினிடமாகத் தோன்றாத நறுமண நுகரும் வண்டு போல்வாள். கற்பகப் பூவில் வண்டு அணுகுவதில்லை. இவள் கற்பகப் பூவில் தோன்றுதற்குரிய சிறப்பு வாய்ந்த வண்டு போல்வாள் என்பது பொருளாகும். ஆடவர் உள்ளமாகிய மலரை மலர்விக்கும் காரணத்தால் வண்டெனப் பட்டாள். "மலையிடைப் பிறவா மணி" யென்பது போலக் கொள்க. காமாரி - காம அரி - மன்மதனை அழித்த சிவ பெருமான்.

6. ஏந்துகைக்கும் ஒவ்வா இளமான்; இமையோர்கள்
மாந்துகைக்கும் எய்தாத வானமிர்தம்;—வேந்தரிடம்

7. செல்லாத திருமேகம் சேராதமின்; படித்துச்
சொல்லாத கிள்ளைச் சுகப்பேடு;—வெல்லா

8. நவரச மாயெவர்க்கு நல்குகைக்கும், காமன்
கவருகைக்கும் எட்டாக் கரும்பு;—சுவைபெற்ற

9. தீபம்; தெவிட்டாத தேன்; உதிராப் பூங்கொம்பு;
தாபம் தணிக்குந் தனிமருந்து;—பாபம்

10. இருப்புநர கைத்தவிர்த்து மெய்க்கலவி என்னும்
திருப்பதவி தந்தருளும் தெய்வம்;—உருப்பொலிந்த

---

6. சிவன் ஏந்துதற்குக் கிட்டாத சிறந்த மான். தேவர்கள் அருந்து தற்குக் கிடையாத அமுதம் போல்வாள்.

7. வேந்தரிடம் செல்லாத திரு. அரசர்களிடம் திருமகள் தங்கி யுள்ளாளென்பது மரபு. "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே யென்னும்" என்பதும் இக் கொள்கை பற்றியதேயாகும். இவள் அவ் வரசர்களிடம் செல்லாத திருமகள் போல்வாள். மின்னல் போல் ஒளி வீசும் மேனியாள். கிளி கற்பித்ததைச் சொல்லும்; இவளோ கற்பியாமலே சொல்லும் பெண்கிளி. சுகம் - கிளி.

8. வெல்லா நவரசம் - சுவைத்துத் தெவிட்ட வியலாத் புதுச்சுவை. யாரிடமும் எடுத்துத்தர முடியாத கரும்பு. மன்மதனால் வில்லாகக் கொள்ளவமையாத கரும்பு.

9. சுவை பெற்ற தீபம் - சுவைதரும் விளக்கு. உதிராப் பூங்கொம்பு - உதிராத பூக்களைக் கொண்ட கொம்பு (உறுப்பெல்லாம் பூப் போன்றவை) தாபம் - காமவேட்கை.

10. பாபம் இருப்பு நரகு - பாவத்தின் விளைவாகத் துய்த்தற்குரிய நரகம். மெய்க்கலவி - உடற்கூட்டுறவு. திருப்பதவி - உயர்பதவி.

"தாம்வீழ்வார் மென்றோட் டுயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு"

என்றவாறு கலவியின்பம் திருப்பதவியாகக் கூறப்பட்டது.

உருப்பொலிந்த:- என்பது முதல் 16 ஆவது கண்ணியிலுள்ள கூந்தலாள் என்பது வரை கூந்தல் வருணனை.

கூந்தல்

11. துண்டவட்ட வெண்மதியைச் சூடி,அறு கால்வளைந்து
கண்டமட்டும் மெத்தக் கறுப்பாகி—மண்டியசெவ்

12. வந்திக்கோ லம்புனைந்து, வன்னமயி லாரிடமாய்,
அந்தப்புன் னாகம் அணிந்தருளி,—முந்தவே

13. நீல மதனை முடித்து, நிரந்தரமும்
சூல தரன்போல் துலங்கியே—கோலம்

14. இருண்டு நெருங்கி எழுந்து படிந்து
சுருண்டு கவிழ்ந்து சுழிந்து—திரண்டெழுந்த

சிவபெருமானுக்கும் கூந்தலுக்கும் ஒப்புமை யமையுமாறு இரு பொருள் பொருந்தக் கூறப்பெற்றுள்ளது. உருப்பொலிந்த - வடிவழகிய.

11. சிவபெருமான் அழகிய சிறு பிறை நிலாவைச் சூடியுள்ளார். மங்கையின் கூந்தலுடன் பிறை போன்ற நெற்றி பொருந்தியுள்ளது. சிவபெருமான் அறுகம் புல்லைத் தலையிற் சூடியுள்ளார். மங்கையின் கூந்தலில் வண்டுகள் மொய்த்துள்ளன. அறுகால் - வண்டு. சிவபெருமான் கண்டத் தளவில் கருநிறம் பொருந்தியவர். மங்கையின் கூந்தல் யாங் கண்ட கறுப்புப் பொருள்களெல்லாவற்றிலும் மிகுந்த கறுப்புடையதாகவுள்ளது. செவ்வந்தி - செவ்வானம், ஒருவகை மலர்.

12. சிவபெருமான் செவ்வானம் போலும் நிறத்தையுடையவர். மங்கையின் கூந்தல் செவ்வந்தி மலரை அழகு பெறச் சூடியுள்ளது. சிவபெருமான் அழகிய மயில் போன்ற உமாதேவியாரை இடப்பங்கில் கொண்டுள்ளார். கூந்தலானது அழகிய மங்கையைத் தன்னிருப்பிடமாகக் கொண்டுள்ளது. புன்னாகம் - கொடிய பாம்பு, ஒருவகை மலர். சிவபெருமான் பாம்பை அணிந்துள்ளார். மங்கையின் கூந்தல் புன்னை மலரையணிந்துள்ளது.

13. நீலமதனை முடித்து - நீலம் அதனை முடித்து. சிவபெருமான் நீல நிறம் பொருந்திய மன்மதனை எரித்தழித்தார். கூந்தல் நீல மலரைச் சூடியுள்ளது. இத் திறங்களால் மங்கையின் கூந்தல் எப்பொழுதும் சூலந்தரித்தவராகிய சிவபெருமானைப் போலத் துலங்குகிறது.

14. இருண்டு நெருங்கி எழுந்து படிந்து சுருண்டு கவிழ்ந்து சுழிந்து - கருநிறம் பெற்றுச் செறிந்து மடிப்பமைந்து முனைசுருண்டு வளைந்து சுழியமைப் பெற்றதாகி.

15. காரொத்துக் காடொத்துக் காவொத்துத் தூயஅறல்
சீரொத்துத் தார்கட்டித் தேன்மொய்த்துச்—சாருற்ஞேர்

16. தேடிப் பயில்கருத்துந் தேம்பாளை யும்புழுகும்
கூடிப் பரிமளிக்குங் கூந்தலாள்;—ஆடரவைத்

நெற்றி

17. தாங்கியிடுஞ் சங்கரனை நொந்தே சசிக்கொழுந்து
நீங்கியிடம் பெற்றனைய நெற்றியாள்;—பூங்கண்

புருவம்

18. இருங்குவளை யோவனச மோஎனவண் டீட்டம்
மருங்குவளைந் தன்னபுரு வத்தாள்;—தரங்கக்

கண்

19. கடலைக் கறுவிக் கயலைச் செருவிப்
படர்பொற் பிணையைப் படிவித் - தடநற்

---

15. கார், காடு, கா, அறல் வரிசை ஆகியவற்றை ஒத்தமைந் தள்ளது. அறல் - கருமணல் - தார் - பூங்கொத்து. தேன் - வண்டு. தார்கட்டி - பூங்கொத்துச் சூடப்பெற்று. சாருற்ஞேர் - உறவினர்.

16. தேடிப் பயில்கருத்து - ஆய்ந்துகூறுங் கருத்து. என்னே கூந்தலின் அழகு எனுங் கருத்து. தேம்பாளை - தேன்பொருந்திய தென்னம்பாளை. புழுகு - புனுகு. ஆடரவை - ஆடும்பாம்பு.

17. நெற்றியின் வருணனை - சிவன் தலையிற் சூடிய பிறைநிலா வானது அங்குப் பாம்புள்ளபடியால் அவ்விடத்தை வெறுத்து நீங்கி இம் மங்கையையடைந்த தென்னுமாறமைந்த நெற்றியினையுடையாள்.

18. புருவம் - கண்களைக் குவளையெனவும் முகத்தைத் தாமரை யெனவும் எண்ணி வண்டுகள் மொய்த்துள்ளமை போலமைந்த புருவத் தினையுடையாள்.

(19-முதல் 25ஆவது கண்ணிவரை கண்ணின் வருணனை.)

19. கடலைக்கறுவி - கடலைச் சினந்து. செருவி - பகைத்து - கடலினும் பெரிய என்பது. பொற்பிணை - அழகிய பெண்மான். தடம்- குளம்.

20. குவளைக் கமலக் குலமுற்(று) அமுதைத்
திவளச் சிதறிச் செறுவிக்—கவலைச்

21. சுரும்பைப் பழிப்பித்துச் சுற்றுவே லொத்துப்
பெரும்பொற் குழையைப் பிடித்துத் திரும்பிக்

22. கொலைபழகிச் செம்பொற் குமிழ்சிகரக் காமன்
கலையடையத் தன்னிலே கற்று—நிலையிற்

23. கருகிவெளுத் துச்சிவந்து கற்றோ ருளத்தைப்
பருகிஅமு துங்கடுவும் பாய்ந்து—திருகிக்

24. குளிர்ந்து நிழலெழுந்து கூரியதாய் நீண்டு
மிளிர்ந்து வடுவகிரை வென்று—கிளர்ந்தசெயங்

25. கொண்டபெருங் கூற்றின் குருபீட மாயுலகில்
கண்டவரைச் சண்டையிடுங் கண்ணினாள்;—கெண்டைவிழி

---

20. குவளைக் கமலக்குளமுற்று - குவளை மலரையும் தாமரை மலரையும் ஒத்து. அமுதைத் திவளச்சிதறி - அமுதைச் சினந்து-அன்பாக நோக்குங்கால் அமுததாரை பாய்வதுபோல் தோற்றும்.

21. கவலைச்சுரும்பு - சுழல்கின்ற வண்டு. வண்டின் உழற்சியைக் காட்டிலும் மிக்க உழற்சியுடையதாகி. குழையைப் பிடித்து - காதொடு மோதி. குழை - ஆகு பெயராகக் காதை யுணர்த்திற்று.

22. கண்டார் உயிருண்ணுந் தன்மையது ஆதலின் கொலைபழகி யென்றார். காமன் கலையடையத் தன்னிலே கற்று - மன்மதக்கலை யனைத்தையும் தன் கண்ணியக்கத்தினாலேயே வெளியிடக்கற்று.

23. அமுதும் கடுவும் பாய்ந்து,

"இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"

என்னுந் திருக்குறளின் கருத்தை நோக்குக.

24. வடுவகிர் - மாம்பிஞ்சின் பிளவு.

25. கூற்றின் குருபீடமாய் - உலகத்துயிர்களையெல்லாம் உடலினின்று கூறுபடுத்துப் பிரிக்கும் இயமனுக்கும் குருவாகும் தன்மையுடைய கண்கள். காதல் வயப்பட்டாருயிரை வாங்குவதில் இயமனைக் காட்டிலும் கொடியன என்பது.

செவி

26. குத்தக்குத் தச்சலித்துக் கொப்புக்கட் டித்தரளப்
பத்திப்பொற் றேடணிந்த பைங்குழையாள்;—எய்த்தவரை

மூக்கு

27. மோகஅனு ராகமுடன் மோந்துசிறு தென்றலினல்
சோகவனல் தணிக்கும் துண்டத்தாள்—பாகிநெடு

வாய்

28. பண்டைஅமு துந்தேனும் பாளிதமும் பண்ணேழும்
கண்டுமிடங் கொண்ட கனிவாயாள்;—துண்டமதி

நகை

29. வெண்ணிலவால் வெந்த விடாயெல்லாம் தன்னுடைய
தெண்ணிலவால் ஆற்றும் திருநகையாள்;—வண்மைகண்டு

---

26. கொப்பு - ஒருவகைக் காதணி. கண்கள் மோதிமோதிச் சலித்துத் தளர்வெய்திய காதுகளை நிலைநிறுத்துவதற்காகக் கொம்புச் சார்பாகக் கட்டிவைத்தமை போன்று கொப்பணிந்த காதினள் எனச் சிலேடை நயம்படக் கூறியதாம். கொம்பு என்பது வலித்தல் விகாரமாகக் கொப்பு எனவரும். இது செவி வருணனை.

27. மோக அனுராகம் - மயக்கும் அன்பு. துண்டம் - மூக்கு. மூச்சுக்காற்றுத் தென்றல்போலினிதாகக் காம அனலைத் தணிக்குமென்பது. இது மூக்கின் சிறப்பு.

28. வாயின் சிறப்பு - வாயூறும் எச்சில் - பாகு, அமுதம், தேன், கண்டு ஆகியவைபோன்ற சுவையுடையதாகும். பாளிதம் - பாற்சோறு. பல்வரிசை பாற்சோறாகக் கூறப்பட்டது.

29. விடாய் - காமவேட்கை. காதல் நோயுற்றவர்க்கு நிலவு துன்பஞ்செய்யும். அத் துன்பத்தைப் போக்கும். ஆற்றல் வாய்ந்த சிரிப்பினையுடையாள். அவள் சிரிப்பு இணக்கமான அன்பிற்கு அறிகுறியாதலின் காதல் வேட்கை தணியப் பெறுமென்பது குறிப்பு. நகை வருணனை.

முகம்

30. சங்கநிதி பதுமநிதி தன்னைச் சுமந்ததுபோல்
செங்களமும் செம்முகமும் சீர்படைத்தாள்;—சங்கரனர்

தோள்

31. வேயூரந் தோன்றிவளர் வித்தார முத்தாரங்
கேயூரந் தோன்றுங் கிளர்தோளாள்;—சேயூரும்

கை

32. அஞ்சக் கரமேந்தி ஆங்குவளை தாங்குமால்
கஞ்சக் கரம்போல் கரம்படைத்தாள்;—சஞ்சலமாய்ப்

கொங்கை

33. பொற்றிருமே ருச்சரிந்து போனலு நான்முகத்தோன்
மற்றிருமே ருப்படைத்து வைத்ததென—முற்றும்

34. விரட்டியொரு மூவுலகும் வெற்றிகொண்டு மாரன்
இரட்டைமுடி வைத்ததிது கொண்டென்னத்—திரட்டியே

---

30. சங்கநிதி, பதுமநிதி என்பன குபேரனுடைய நவநிதிகளுள் இரண்டு. சங்கம் போன்ற கழுத்தும், தாமரை போன்ற முகமுமுடையாள். முக வருணனை.

31. மூத்துப் பிறக்குமிடங்களுள் மூங்கிலு மொன்றென்பர். சிவன் ஒரு காலத்திலே மூங்கிலிலே ஒளிந்திருந்ததாகப் புராணக் கதை. அதனல் மூங்கில் சிவனுக்கு ஊராயிற்று. கேயூரம் - மகளிர் தோளணி. முத்தாரம் கேயூரம் தோன்றும் - முத்துமாலையானது கேயூரத்தோடு நெளிநெளியாக அமையுமாறு பொருத்தப்பட்டிருக்கும். தோள் சிறப்பு.

32. அஞ்சக்கரம் - அழகிய சக்கரம் - வளை - சங்கு. கஞ்சக்கரம் - தாமரை போன்ற கைகள். மால் கஞ்சக்கரம் - திருமாலினுடைய தாமரைக் கைகள் போன்ற கைகளையுடையாள். கை வருணனை.

(33 முதல் 43 ஆவது கண்ணிவரை கொங்கைகளின் வருணனை.)

33. பொற்றிருமேரு - பொன்மயமாகிய அழகிய மேருமலை. நான்முகத்தோன் - பிரமன். கொங்கையிரண்டும் இரு மேரு மலைகள் போன்றவை.

34. மாரன் - மன்மதன். மூவுலகங்களையும் காதற்போரில் வென்று சூடிய இரு மணிமுடிகள் போன்றுள்ளன.

35. அண்ட மனைத்துமிரண் டாக்கியொரு மின்கொடிமேல்
சண்டைமதன் காட்டுமிந்திர சாலமெனக்—கண்டகிரி

36. முற்றுமிரண் டாய்முளைத்து முற்பகையாம் இந்திரன்றன்
செற்ற முடிக்கெழுந்த சீற்றமெனப்—பற்றிப்

37. பொருகூற்ற மஞ்சிப் புறங்கொடுப்ப மண்மேல்
இருகூற்றந் தோன்றினவோ என்னச்—சுரர்கூட்டம்

38. அத்தா னவர்க்காய் அமுதகல சத்தையொளித்
தித்தா ரணிமே லிருத்தியென—மெத்தப்

39. புளகித்துக் கர்ச்சித்துப் பூரித்துச் சற்றே
இளகிக்கச் சிட்டுப்பொற் பேந்திக்—களபக்கற்

40. பூரத்தைப் பாளிதத்தைப் பூசிக்கண் தாபித்துப்
பாரித்துப் பாலித்துப் பாவித்துத்—தூரத்தில்

---

35. அண்டங்களத்தனையையும் திரட்டி இருகூருக்கி அவற்றை ஒரு மின்னற்கொடியிற் பொருத்தி மன்மதன் காட்டும் இந்திரசாலக் காட்சி போன்றமைந்த கொங்கைகள்.

36. மலைகளனைத்தும் திரண்டிரண்டாகி, ஒருகாலத்தில் தங்கள் சிறகையரிந்த இந்திரனுகிய பகைவனை எதிர்த்தழிக்கச் சினங்கொண்டு முற்பட்டமை போன்றுள்ளன. ஒருகாலத்தில் மலைகளுக்குச் சிறகுகளிருந்தன; அவற்றை இந்திரன் வெட்டித் தள்ளினுனென்பது கதை.

37. இயமனைப் புறங்காட்டி யோடுமாறு செய்யத் தோன்றிய இரு கொங்கைகளாகிய எமன்கள். சுரர் - தேவர்.

38. தானவர் - அசுரர். அசுரர்களுக்குக் கிடைக்காதபடி செய்வதற்காக அமுத கலசத்தைத் தேவர்கள் இங்கு மறைத்து வைத்துள்ளனர்.

39. புளகம் - மயிர்ச்சிலிர்ப்பு. கச்சு - மார்புக்கச்சு. களபக்கற்பூரம் - சந்தனக் கலவையிலிடப்பட்ட பச்சைக் கற்பூரம்.

40. பாளிதம் - சந்தனம். கண்-முலைக்கண். பாலித்து-பாலுடைத்தாகி. பாவித்து - பரவுதலுடையதாகி; மார்பிடமெல்லாம் பரவி.

41. பச்சென் றும் புற்கென் றும் பக்குவத்தில் தப்பாமல்
வெச்சென் றும் தண்ணென் றும் மெத்தென் று—நிச்சந்

42. தருக்கி நெருக்கித் தனகி இறு மாந்து
செருக்கியினங் கிச்சுணங்கு சேர்ந்து—கரிக்குலத்தின்

43. நாட்டங்க ளெல்லாம் நடுங்கப் பெருந்தவத்தோர்
கூட்டங் குலைக்கும் குவிமுலையாள்;—நாட்டை

வயிறு

44. அளவிடும்பச் சைத்துளவோ னாலிலையென் றேகண்
வளர இடம் பார்க்கும் வயிற்றாள்;—அளிகளுடன்

---

41. தொலைவில் நின்று நோக்கும் போது பசுமையாகக் காட்சி தந்து நெருங்கியக்கால் புற்கென்று போய்விடாமல் அணிமையில் நோக்குங்காலும் வியப்பூட்டு மளவுக்குப் பருத்த கொங்கைகள். வெச்சென் றும் தண்ணென் றும் - குளிர் காலத்தில் வெது வெதுப்புடையதாகவும், கோடையில் தண்மையுடையதாகவும் இருத்தல். நிச்சம் - எப்பொழுதும்.

42. நெருக்கி - இருகொங்கைகளுக்குமிடையில் வெற்றிடமில்லாமல் ஒன்றையொன்று நெருக்கி. தனகி - காதற்கிளர்ச்சியூட்டி. சுணங்கு - தேமல். தேமல்படர்ந்திருப்பது அழகாகும்.

43. கரிக்குலத்தின் நாட்டங்களெல்லாம் நடுங்க - யானைக் கூட்டமே கண்டு நடுங்க. யானையின் மத்தகத்தைக் கொங்கைக்கு உவமை கூறுவர். ஆனால் இந் நங்கையின் கொங்கை மத்தகத்தையும் விஞ்சக் கூடியதாக வுள்ளது.

பெருந்தவத்தோர் கூட்டங்குலைக்கும் குவிமுலையாள் - அரிய தவத்தினரும் கண்டு காதல் கொண்டு தங்கள் தவத்தைத் துறக்கச் செய்யும் கொங்கையினாள்.

'எண்ணிலாப் பெருந்தவத்தோர் தங்கள் தவப்பயனை மங்கை யொருத்தியின் அடிமலர்களில் படையல் செய்து விட்டனர்' என்ற பாவலர் இரவீந்திரரின் கூற்றை இவ் வரி நினைவூட்டுகின்றது.

44. நாட்டை அளவிடும் பச்சைத்துளவோன் - உலகளந்த பெருமானாகிய திருமால். துளசிமாலையை அணிந்தவன். ஆலிலையிற் பள்ளி கொள்பவனாகிய அத் திருமால் இந் நங்கையின் வயிற்றை ஆலிலை

வயிற்று மயிர் ஒழுங்கு

45. பின்னுல விட்டகுழற் பின்னற்பிர காசவொளி
முன்னுகத் தோன்று முறைமையென— நன்னுரி

46. வேரி படிந்தொழுகு மென்கொங்கை தாங்கியகஸ்
தூரி படிந்தொழுகுந் தோற்றமென — மாரனுடல்

47. வேமளவில் உந்திமடு வீழப் புகையெழுந்து
கோமளமாய்த் தோன்றுங் கொழுந்தென்ன—மாமுலையாம்

48. கைத்தாளஞ் சுற்றியநீ லக்கயிறு நால்வதென
வித்தார ரோமம் விளங்குவாள்;—முத்தாற்றில்

யாகக் கருதிப் பள்ளிகொள்ள எண்ணுகின்றான். கண்வளர்தல் - துயில் கொள்ளல்.

45. வயிற்று மயிரொழுங்கு - அளிகளுடன் பின்னுல விட்டகுழற் பின்னற்பிரகாச ஒளி. முன்னுகத் தோன்று முறைமையென-வண்டுகள் மொய்க்குமாறு முதுகுப்புறத்தில் பின்னித் தொங்கவிடப்பட்ட குழற் சடையின் நிழல் ஊடுருவி முன் மார்புப்பக்கத்தில் தோன்றுவது போன் றமைந்த வயிற்று மயிரொழுங்கினள். நன்னுரி - ஒருவகை மணவேர்.

46. வேரி - மணம்- வேரிபடிந் தொழுகல்-மணம் தங்கிப்பரவுதல். கொங்கை தாங்கிய கஸ்தூரி படிந்தொழுகுந் தோற்றமென - கொங்கை யிற் பூசிய கத்தூரி ஒழுகிவருவது போன்று - கத்தூரி கருநிறமுடை யது.

47. உந்தி - கொப்பூழ். கோமளமாய் - மென்மையாய். 'கோமளக் கொழுந்து' (திருவாசகம்). அழகாய் என்றுங் கூறலாம்.

மெல்லிய புகைக்கொழுந்து போன்ற உரோம வரிசை எங்ஙனந் தோன்றியதென்பதற்கு ஒரு காரணங் கற்பிக்கப்படுகின்றது. மன்ம தனைச் சிவன் எரித்தபோது அவன் இந் நங்கையின் உந்தியாகிய மடுவிலே விழுந்து உண்டானது. இதனுல் உந்தி காமக் கிளர்ச்சியூட்ட வல்லதென்பது கருத்து.

48. உரோம வரிசைக்கு மற்றுமொரு ஒப்புமை. முலைகளிரண்டும் தாளமாகவும் அத் தாளங்கள் இரண்டனுேடும் பிணைந்த கயிறு இணைந்து தொங்குவது போல் உரோம வரிசையமைந்துள்ளதாகவும் கூறுகின்றார். நீலம் - கறுப்பு. நால்வது - தொங்குவது. வித்தாரம் - பரப்பு.

உந்தி

49. வெள்ளஞ் சுழிக்கும் வியன்சுழிபோல் மேதினியோர்
உள்ளஞ் சுழிக்கின்ற உந்தியாள்;—தெள்ளியதோர்

இடை

50. வான்படைத்தோன் தன்பதவி மாருதிபெற் ருல்பின்பு
தான்படைக்கில் உண்டாந் தனிமருங்காள்;—மீன்பிடித்துத்

அல்குல்

51. திக்காளுந் தேரோன்றன் தென்றற்கா லங்கழிந்தால்
அக்காலந் தேராகும் அல்குலாள்;—மிக்க

தொடை

52. கலவிதனில் வேருங் கலைவேலிக் குள்ளே
குலவுகின்ற வாழைக் குறங்காள்;—அலவனையோர்

கணைக்கால்

53. பொங்குவரால் முட்டுவது போலமுழந் தாளும்
தங்குகணைக் காலும் தருமழகாள்;— இங்கிதஞ்சேர்

---

49. உந்தி. முத்தாறு - அழகிய ஆறு. ஆற்றுச் சுழிபோல் அமைந்தது. உலகினர் உள்ளத்தைச் சுழியவைப்பது.

50. இடை. மாருதி - வாயுமைந்தன். வான்படைத்தோன் - கடவுள். உலகைப் படைத்தவன் என்றபடி. வாயுமைந்தன் காற்றுவடிவினனாதலின் அவன் காற்றைப் போன்று கண்ணுக்குத் தோன்ருத வகையில் இடையைப் படைத்துவிட்டானென்பது.

51. மன்மதனுக்குத் தேர் தென்றல். வேனிற் காலத்திற்குப் பிறகு தென்றல் அரிது. அக்காலம் அவனுக்குத் தேராகும் அல்குலாள்.

52. கலைவேலி - சேலையாகிய வேலி. குறங்கு - தொடை. வேருதல் - அகற்றப்படுதல். அலவன் - நண்டு.

53. பொங்குவரால் - பருத்த வரால். சினந்த வரால் என்றுஞ் சொல்லலாம். வரால் என்பது ஒருவகை மீன். முழந்தாளின் முகப்பு

பரடு

54. மைந்தரா னேரை மதித்துமதிப் பாய்நிறுக்கும்
பைந்தரா சன்ன பரட்டினள்;—கந்துகம்போல்

குதிக்கால்

55. வைத்த குதியாள்; அனம்போல் வாய்த்த நடையாள்; நடக்கு
மெய்த்தகுவியாள்; சீர் மிகுதியாள்;—சித்தசனன்

புறவடி

56. பொத்தகமே வாடியதிப் பொத்தகமே தாழ்ந்திறைஞ்சும்
பொத்தகமே யான புறவடியாள்;—பத்திபெறப்

நகம்

57. பத்துமதி யைப்பதித்த பைம்பவழக் கொத்துப்போல்
சித்திர நகப் பத்துவிரற் செப்பத்தாள்;—கைத்தாயர்

நண்டு போன்றுள்ளது. அதன் கீழ்ப்பாகம் ஒரு வரால் மீனை து மேல் நோக்கி நண்டைக் கவ்வி யுள்ளது போன்றுள்ளது. கணைக்கால் வரால் மீனின் வால்பாகம் போன்றுள்ளது.

'முழந்தாட்குவமை கேட்கிலவை நண்டு'; 'செவ்வரால் கவ்வி நின்ற ஓர் அலவனே முழந்தாள்' என வருவன காண்க. இங்கிதம்-இனிமை.

54. பரடு. கணைக்காலின் இருபுறத்தும் அமைந்துள்ள கரண்டை. 'புடைச்சிறு பரடு புல்லிக் கிண்கிணி சிலம்பொ டார்ப்ப' (சீவகசிந்தா மணி).

55. குதி-அடிக்கீழ்ப் பின்பகுதி. கந்துகம் போல் வைத்த குதி யாள்-பந்துபோல் திரட்சியாக அமைந்த குதிக்காலினையுடையாள். சித்தசனன்-மன்மதன்,

56. பொத்தகமே வாடிய தீப்பொத்தகமே. பொத்து அகமே-தீ பொத்து வாடிய அகமே-(மன்மதனானவன்) (இந் நங்கையின்) காதலால் துளைக்கப்பட்ட உள்ளம் தீப்பற்றி வாடிய உள்ளமாகித் தாழ்ந்து இறைஞ்சும்-பணிந்து வணங்கும். பொத்தகம்-புத்தகம். புத்தகத் தினைப் போன்ற புறவடியினையுடையாள். தீ என்பது தி எனக் குறு கிற்று. அனைவரையும் காதலிற்றூண்டும் மன்மதனே இந் நங்கையைக் காதலித்துத் தாழ்ச்சியுற்று அடிபணிந்தானென்பது கருத்து. தீ-காதல் நெருப்பு.

57. விரல்கள் பவளத்துண்டங்கள் போலவும், நகங்கள் நிலாத்

அடி

58. பஞ்சிப்போ தேயெழுதிப் பார்த்தாலோ வென்றுரைக்கும்
செஞ்சொற்கேட் டேசிவக்கும் சீரடியாள்;—மிஞ்சவே

சொல்

59. வேம்பாகை வேம்பாக்கி விண்ணமுதைத் தப்பாக்கித்
தேம்பாகை நஞ்சாக்கும் தீஞ்சொல்லாள்—ஆம்பளிங்கில்

வடிவு

60. கண்ணில் புனேமணியில் கண்ணு டியிலன்றி
மண்ணில் தனக்குவமை மாற்றினுள்;—எண்ணித்

61. தெரிவுற்ற மாரனுக்குச் செங்கோல் செலுத்தும்
அரிவைப் பருவத் தணங்கு—பரவையிலே

சோலை

62. சந்தனமும் திண்குரவும் தண்கமுகும் சண்பகமும்
சுந்தரியும் பாடலியும் சூழ்பலவும்—மைந்தகிலும்

துண்டங்கள் போலவும் உள்ளன. மதி-நிலா. செப்பம்-திருத்தம் கைத்தாய்-வளர்ப்புத்தாய் (செவிலி).

58. செம்பஞ்சுக் குழம்பைப் பாதத்தில் அணிதல் வழக்கம். அப் பஞ்சும் அவள்காலை யுறுத்துமளவுக்கு மெல்லியல் வாய்ந்தாள்.

59. பாகும் அமுதும் தேனும் அவள் சொல்லினிமைக்குத் தோற்று விடுகின்றன.

60. பளிங்கு-சலவைக்கல். அவளுக்கு ஒப்பு அவளே. பளிங்கு. கண்மணி, கண்ணுடி ஆகியவற்றில் அவளது வடிவநிழலைக்கண்டு அதனை உவமை கூறலாமேயன்றி வேறு உவமை கூறுதற்கரியாள்.

61. மன்மதனுக்குத் துணையாகவமைந்து ஆட்சி நடத்துபவள். அரிவை-பெண்-இருபது முதல் இருபத்தைந்து அகவைக்குட்பட்ட பெண். அணங்கு-தெய்வமகள். பரவை-பாட்டுடைத்தலைவனது ஊர். இதுவே பாவையெனவும் வருகின்றது. இரு வழக்கு முண்டு போலும். வியர்வை வேர்வை ஆனாற்போலப் பரவை என்பது பாவை ஆகியிருக்கக்கூடும். எண்ணித் தெரிவுற்ற-மன்மதன் ஆய்ந்து தேர்ந் தெடுத்த.

63. ஞாழற் குலமும் நரந்தையொடு புன்னைகளும்
சூழப் பொலிந்திலங்கு சோலைவாய்;—ஆழித்

காட்சி

64. திருப்போல் மடப்பிணைபோல் சித்திரம்போல் மின்னல்
உருப்போல் மதவேள் உயிர்போல்—விருப்பம்சேர்

65. சொன்னம்போல் கொம்புபோல் தோகைபோல் பூவுலகின்
அன்னம்போல் வந்துலவும் அப்போதில்;—முன்னம்போய்த்

66 தெய்வரம்பை யென்றே தியங்கிப் பெரும் பயத்தோ
டுய்வரம்பைப் பற்றி ஒதுங்கினேன்—அவ்வளவில்

67. மண்மே லடியாலும் மாரு இமைப்பாலும்
எண்மேவு மானிடப்பெண் ணென்னவே—உண்மேவும்

68. ஐயம் தெளிந்தேன்; அருங்காதல் மீதூர்ந்தேன்;
மெய்யுந் தளர்ந்து வெளிநின்றேன்—தையனல்லாள்

தலைவியிடம் உரையாடல்

69. முன்னாகச் சென்றேன்; முளரிப்பூங் கோயிலைவிட்
டின்னாகப் பூங்காவில் ஏன்வந்தீர்?—மின்னேயும்

62, 63. சோலைவருணனை. குரவு - குராமரம். சுந்தரி, பாடலி மரவகைகள். ஞாழற்குலம் - புலிநகக் கொன்றை, பொன்னாவிரை, கோங்கு முதலியன. நரந்தை - ஒரு கொடி.

64. திரு - இலக்குமி. ஆழித்திரு-இலக்குமி பாற்கடலிற் பிறந்தவளாதலின் ஆழித்திரு எனப்பட்டாள். மடப்பிணை - இளமான். மதவேள்-மன்மதன்.

65. சொன்னம் - சுவர்ணம் - பொன். தோகை - மயில்.

66. தெய்வரம்பை - தேவருலகத்து அரம்பை. உய்வரம்பு-உய்யும் வழி. தேவமகளால் ஊறு நேருமோ என்றஞ்சி யொதுங்குதல்.

67. கால்நிலந்தோய்தலாலும் கண்ணிமைத்தலாலும் மானிடமகளென்று துணிந்தேன்.

68. மீதூர்தல் - மேலும் மேலும் வளர்தல்

69. முளரிப் பூங்கோயில் - தாமரையாகிய கோயில். அவளை

70. மெய்க்குற்ற மோஎன் விழிக்குற்ற மோபிரமன்
கைக்குற்றமோ மருங்குல் காண்கிலேன்—எக்குற்றங்

71. காட்டீர்? மிகமருங்குல் காரிகளைக் கண்டுகடன்
கேட்டீ ரிலேயோ? கிளிமொழியீர்;—நாட்டமுடன்

72, பூந்தடத்தில் இப்போது பூப்பறிப்பார் போலவே
மாந்தருயிர் பறிக்க வந்தீரோ?—ஏந்திழையீர்

73. இங்குநடந் தாலன்ன மிங்குநிற்கு மேநின்றால்
நங்கமலத் தோனு நடப்பனே?—மங்கை நல்லீர்,

74. இச்சாயல் கண்டுமயில் இங்குவந்தா லுங்கள்மேல்
மெய்ச்சாயல் வேலோன் வெகுளானே?—அச்சமற

75. ஈரமொழிக் காய்க்கிள்ளை இங்குவரக் கண்டக்கால்
வீரமதன் தண்டெடுத்து விட்டாலோ?—பார்வைகண்டு

இலக்குமிக்கு ஒப்பானவள் என்பதைக் குறிப்பாகச் சொல்லுகின்றான். நாகப்பூங்கா - புன்னைமரச் சோலை.

70. அவளுடன் உரையாடல். உனது இடையை என்னால் காண முடியவில்லை. அஃது உன் உடம்பின் குறையா? என் கண்பார்வையின் குறையா? அல்லது பிரமன் படைப்புக் குறையா? என்று வியந்து கேட்கிறான். நுண்ணிடையென்பது இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

71. மிக மருங்குல்காரிகள் - பருத்த இடையுடையவர்கள். பருத்த இடையுடையவர்களிடம் கடனாகவாவது சிறிது வாங்கிக் கொள்ளக் கூடாதா?

72. பூப்பறிப்பார் போல வந்து கண்ட மாந்தர் உயிரைப் பறிக்கின்றீர் என்பது.

73. கமலத்தோன் - பிரமன். நீங்கள் நடந்தால் உங்கள் நடையழகைக் கண்டு பயில அன்னம் இங்கேயே நின்றுவிடும். பிறகு பிரமன் நடந்தா செல்லுவான்?

74. உங்கள் சாயலைக் கண்டு மயங்கி மயில் இங்கு வந்துவிட்டால் அழகிய மெய்யினையுடையவனாகிய முருகன் உங்கள்மீது சினங்கொள்ள மாட்டானா?

75. உங்கள் இனிய சொல்லினைக் கேட்க விரும்பிக் கிளி இங்கு

76. மானிங்கே நிற்கையினுல் மானைத்தே டிப்பரமன்
தானிங்கே வந்தால் தடுப்பவரார்?—கானற்

77. குழல்செய்த சொல்லீர், குளிர்காவில் இந்த
நிழல்செய்த மாதவமோ, நின்றீர்?—தழைத்த

78. வடமேந்து கொங்கையுரோ மாவலியு மாயன்
குடமேந்தி நின்ருடுங் கூத்தோ?—வடுவார்ந்த

79. நஞ்சங்கே பாம்பிங்கே நத்தங்கே முத்திங்கே
மஞ்சங்கே மின்னிங்கே மாதரீர்—செஞ்சொல்

80. அடுக்கின்ற வேதா அடுக்கைக் குலைத்துப்
படைக்கின்ற போதே படைத்தான்—வடக்கொங்கை

வந்து விட்டதைக் கண்டால் மன்மதன் படையெடுக்க மாட்டானு? மன்மதனுக்கு ஊர்தி இளி.

76. பார்வை கண்டு மான் மடங்கி நின்ருல் மானேந்திய சிவபெருமான் மானைத்தேடி வருவாரே?

77. கானற்குழல் - காட்டு மூங்கிலிற் செய்த புல்லாங்குழல். குழலிசை போன்ற சொல்லையுடையீர்.

78. வடம் - கழுத்தில் அணியும் பொன்மாலை. உரோமாவலி - உரோம வரிசை. ஆவலி - வரிசை.

மாயன் குடமேந்தி நின்ருடுங்கூத்து - கண்ணன் வாணனது அரண் சூழ்ந்த வீதியில் குடம் கொண்டு ஆடிய கூத்து.

கொங்கையிலணிந்த வடம் அரணுகவும், உரோமவரிசை கண்ணனுகவும் கொங்கைகள் குடங்களாகவும் கொள்ளப்பட்டன.

79. வடுவார்ந்த நஞ்சு - மாவடுப்போன்ற கண்ணிற் பொருந்திய வருத்தும் நோக்கமாகிய நஞ்சு. வடுவார்ந்த - பழிப்புக்குரிய. பாம்பு என்பது அல்குலைக் குறிக்கும். சங்குகழுத்தைக் குறிக்கும். முத்து என்பது பற்களைக் குறிக்கும். சங்கில் முத்துப்பிறக்கும். நத்து - சங்கு.

மஞ்சு - மேகம். மேகம் கூந்தலைக் குறித்தது. மின் - இடையைக் குறித்தது.

80. செஞ்சொல் அடுக்கின்ற வேதா - அழகிய சொற்களை நிரல்படஅமைக்கும் பிரமன்.

அடுக்கைக்குலைத்துப் படைத்தான். இங்கு மட்டும் தொடர்பின்றிப் பொருள்களை வெவ்வேறிடங்களிற் படைத்து விட்டான்.

81. அந்தரத்தே நிற்குமோ? ஆர்க்கும் பரமடியேன்
சந்தயத்தை விட்டுமெல்லத் தாங்கவோ?—பைந்தொடியீர்.

82. முத்தனே கஞ்சேர் மூலக்கயிலா யந்தனிலே
பித்தனெனைச் சேர்க்கிற் பிழையாமோ?—வித்தார

83. ஓடைகொண்ட தண்கழிபோல் உந்திச் சுழியிருந்து
வேடைகொண்ட யான்குளிக்க வேண்டாமோ?—ஏடுகொண்டு

84. கொந்திருக்கும் பைந்தார்க் குழல்மேகத் தூடுநான்
இந்திரன்போல் வந்திருந்தால் ஏலாதோ?—பந்திகொண்ட

85. கண்ணுன செவ்விக் கருங்குவளைக் கேயடியேன்
பண்ணுர் சுரும்பாய்ப் படியேனே?—விண்ணில்

86. அடுத்துவருந் தானவர்கள் ஆரமுதம் உண்ணுமல்
தடுத்தவருந் தேவதைநீர் தாமோ?—எடுத்தமுகம்

---

81. வடக்கொங்கை அந்தரத்தே நிற்குமோ? - வடமேந்து கொங்கை என்று முன்பே வந்துள்ளது. இடையில்லாமல் கொங்கை எவ்வாறு நிற்கும்?

சந்தயம் - ஐயம். தொடி - முன்வளை.

82. முத்தனேகஞ்சேர் மூலக்கயிலாயம் - முத்துக்கள் மாலையாகிச் சேர்ந்துள்ள மலை போன்ற கொங்கை - முத்துமாலையின் வெண்மையால் கயிலாயமலை யெனப்பட்டது. வித்தாரம் - பரப்பு.

83. ஓடைச்சுழி போன்ற உந்திச்சுழி. சுழி பெற்றமையால் ஓடையாயிற்று.

வேடை - வேட்கை. ஏடு - மலரிதழ். இந்திரன் மேகநாதன்.

84. கொந்து - பூங்கொத்து. பந்தி - வரிசை. இருகண் வரிசை.

85. செவ்விக் கருங்குவளை - அன்றலர்ந்த அழகிய குவளை. குவளை மலர் கண்ணுக்கு உவமை.

86. தானவர் - அசுரர்.

ஆரமுதமுண்ணுமல் தடுத்த தேவதை மோகினி. அவள் அழகைக் கொண்டவள் என்றபடி.

87. நாலே படைத்து நகைபடைத்துப் பங்கயத்தோன்
மாலே படைத்ததுவும் மாலேயோ?—சீலமுடன்

88. மருவியுமைச் சேர்ந்திருந்து வாழாம லன்றோ
பொருவிசையன் பேடியாய்ப் போனான்?—திரிபுரத்தைச்

89. செற்றவனும் கொல்லிச் செழும்பாவை யும்நகைக்கக்
கற்றதுவும் இந்தநகை கண்டேயோ?—முற்றுலகில்

90. பாவையர்போல் காமப் பசியாற்ற மாட்டாத
கோவையமு தத்தையேன் கொண்டிருப்பீர்?—ஓவியமென்

91. றெல்லாரும் எண்ணாமல் என்னுள்ளந் தேறவொரு
சொல்லாகி லும்தெளியச் சொல்லிடீர்—கல்லான

---

87. நான்கு முகங்களையுடையவனாகிய பிரமன் நகைத்துக் கொண்டு மயங்கியிருப்பது உன்மீது உண்டான ஆசையினாலா ?

பங்கயத்தோன் - பிரமன். மால் - மயக்கம். பங்கயத்தோன் மாலடைந்தான்; பங்கயத்தோனைத் திருமால் படைத்தான் என இரு பொருள் தொனிப்பது காண்க. சீலம் - ஒழுக்கம்.

88. பொருதல் - போர்செய்தல். விசையன் - அருச்சுனன். அருச்சுனன் சிறிது காலம் பேடியாயிருந்தானென்பது கதை. இந் நங்கையைச் சேரும் பேறுகிட்டாத ஏக்கத்தினால் பேடியாயினானென்று கற்பித்துள்ளார்.

89. கண்டோரைத் தன்வயப்படுத்தும் ஆற்றலும், அவரைத் துன்புறுத்தும் ஆற்றலும் இந் நங்கையின் நகைப்பிலுள்ளன. எனவே, கண்டாரை நகைத்து வயப்படுத்தும் கொல்லிப்பாவையும், நகைப்பினால் திரிபுரங்களை அழித்தவனாகிய சிவபெருமானும் இந் நங்கையின் நகைப்பினின்று அத் திறம் பெற்றார்களோ? என்பது.

90. கோவையமுதம் - கோவைக்கனிபோன்ற இதழமுதம். உலகத்துப் பாவையர் அமுதளித்துப் பிறர் பசியைப் போக்குவர். நீரோ அமுதத்தை வைத்திருந்தும் பசி தீர்க்காதவராயுள்ளீர். அமுதம் என்பது உணவையுங் குறிக்கும்.

91. வாய்திறந்து பேசாவிடில் எல்லாரும் உம்மை ஓவியமென்றே யெண்ணுவர்.

92. நெஞ்சுமக்குத் தந்த நெடும்பாத கம்பலித்தோ
கஞ்சனவன் பேர்விளங்கக் கண்டிலோம்?—தஞ்சமுடன்

93. நந்தான ஊழியங்கள் நான்செய்ய வோ; அதற்கு
வெந்தான காமனையேன் வேண்டுவீர்?—முந்தக்

94. குலவியகூற் றென்றுவிழிக் கூற்றம் இரண்டானால்
உலகுதனில் கூற்றமூன் றுண்டோ?—கலவியிலோர்

95. பெண்ணைச்சேர்ந் தாயிரங்கண் பெற்றானிப் போதுமைநான்
கண்ணுற்றா லும்இலக்கங் கண்ணுமோ?—நண்ணும்

96. பெருங்கொற்ற வேள்வடிவு பெற்றிலேன் என்றே
இரங்கித்தான் பார்த்தீ ரிலையே—தரங்கித்தான்

97. ஆதரவால் மைந்தரைமால் ஆக்கியே இவ்வுலகின்
மாதரையும் மாலாக்க வந்தீரோ?—தீதிலாத்

---

92. கஞ்சன் - தாமரை மலரில் வீற்றிருப்பவனாகிய பிரமன். பிரமனுக்கு எங்கும் தனிக்கோயில் அமைந்திலது. அக் குறைக்குக் காரணம் உமது நெஞ்சத்தைக் கல்லாகப் படைத்த பாவமே என்பது. தஞ்சமுடன் - பணிவுடன்.

93. நந்தான - ஆக்கம் தருகின்ற. வெந்தான காமன் - வெந்துபோன மன்மதன்.

94. உம்முடைய இரு கண்களும் இரு கூற்றங்கள்; முன்னமேயுள்ள கூற்றமொன்று. ஆக உலகிற் கூற்றங்கள் மூன்றா?

95. இந்திரன் அகலிகையைச் சேர்ந்து ஆயிரங் கண் பெற்றான். நான் உம்மைக் கண்டாலே இலக்கங் கண்ணுண்டாகுமோ?

96. வேள் - முருகன், மன்மதன். தரங்கி - மனங்கலங்கி.

97. ஆதரவு - அன்பு. ஆடவரேயன்றி, மகளிருங் கண்டு மையல் கொள்ளத்தக்கவராயுள்ளீர் என்பது கருத்து.

மகளிர் தாம் ஆடவராகப் பிறக்கவில்லையே யென்று ஏங்கச் செய்யும் அழகு.

'பெண்டிரும் ஆண்மை வெஃகிப் பேதுறும் மூலையினாள்' என்பது சிந்தாமணி.

98. துய்யோன் மருண்டிட நீர் தோன்றுக்கால் இந்தயுகம்
ஐயோ கலியுகந்தான் ஆகாதோ! —கையார்ந்த

99. கூரிநக மென்னும் குடாரியிட்டு நானேற
வீரமுலை யானையைஎன் மேல்விடுவீர்—பேராசை

100. ஆற்றில் விழுந்தஎனை அந்தத் திருத்தோளில்
ஏற்றிக் கரையேற்றி ஈடேற்றிக்—கூற்றுவன்போல்

101. மாகாமன் கொல்லுமுன்னே வாயமுதை இங்கருத்திச்
சாகா வரமெனக்குத் தந்தருளீர்—ஆகாஅவ்

102. வாரம்போல் நூபுரம்போல் ஆடைபோல் மேகலா
பாரம்போல் மெய்தீண்டிப் பார்த்தேனோ?—பாரிடத்தில்

103. மெய்க்காத லேயளித்து வெம்புவிப்ப நல்லாமல்
அக்காதல் மாற்ற அறியீரோ? —தக்கதுதி

---

98. துய்யோன் - தூயோன். இது தலைமகன் தன்னைக் குறிப்பிடுவது. கலியுகம் தூய்மை குன்றிய காலம் எனக் கருதப்படுகின்றது.

99. குடாரி - யானையை அடக்குங் கருவியாகிய தோட்டி (அங்குசம்).

100. திருத்தோளில் ஏற்றல் - அழகிய தோளில் அணைத்துக் கொள்ளுதல்

101. மாகாமன் - ஆற்றல்மிக்க மன்மதன் - அமுதம் சாவாமையை வழங்கும்.

102. ஆரம் - முத்துமாலை. நூபுரம் - சிலம்பு. மேகலாபாரம் - இடையிலணியும் அணி.

முத்துமாலை முதலியன உமது மெய்தீண்டும் பேறு பெற்றமை போல யான் பெற்றேனில்லையே யென்னும் ஏக்கம் கூறப்படுகின்றது.

'கச்சாய்க்கிடக்கத் தவஞ்செய்தி லேனிந்தக் காரிகைக்கே'

என்னும் குற்றாலக் குறவஞ்சியடி ஒப்புநோக்கத்தக்கது.

103. காதற்கிளர்ச்சியைத் தோற்றுவிக்கும் திறம் வல்லீர். ஆற்றுவிக்கும் திறமறியீரோ?

104. செய்தாலோ கெம்பீரச் சேயிழையீர் உம்மைநான்
வைதாலோ வாய்திறந்து வாவென்பீர்?—எய்தா

105. இடர்ஏற்றித் தூறேற்றி என்னையிந்த ஊரில்
மடலேற்றிப் போகவோ வந்தீர்?—கடலேற்றச்

106. சேலான கண்ணீர் திருமகளாம் உமைத்தேடி
மாலானேன் என்னவே மார்பணுகீர்—மேலோங்கும்

107. இந்தமுலை மேருவையே ஏடாக என்உகிரே
தந்த எழுத்தாணி தானுக—முந்தியவேள்

108. மைப்பாரப் பூசலெனும் மாபார தப்போரை
இப்பார் அறிய எழுதுவேன்—செப்பீர்

---

104. தலைவியை எவ்வாருவது உரையாடச் செய்தல் வேண்டுமென விழைந்த தலைவன் இவ்வாறு கூறுகின்முன். உம்மைப் புகழ்ந்தால் வாய்திறந்து பேசுவீரோ, அல்லது வைதால் வாய்திறந்து பேசுவீரோ என்கின்முன்.

சேயிழையீர் - அழகிய அணிகலனையணிந்த நங்கையீர்.

105. எய்தா இடர் - இதுவரை பட்டறியாத பெருந்துன்பம். தூறு - பழிச்சொல். மடலேறுதல் - காதலித்த தலைவியை அடையும் பொருட்டுப் பனைமடலாலான குதிரையூர்ந்து வீதியில் உலாவரல். இதன் விளக்கம் முகவுரையிற் காண்க. கடல் ஏற்ற - துன்பக் கடலி லிருந்து என்னைக் கரையேற்ற.

106. திருமகளாம் உமைத்தேடி மாலானேன் - திருமகள் போன்ற உம்மைத் தேடிவந்த நான் மாலானேன் - மயக்கமுற்றேன், திருமா லானேன் என இருபொருள் கொள்க. திருமகள் திருமாலின் மார்பி லுறைபவளாதலின் மாலான என் மார்பணுகீர் என்பது. கடலேற்ற மார்பணுகீர் என முடிக்க.

107. வியாச முனிவர் அருளிய மாபாரதக் கதையை விநாயகப் பெருமான் மேருமலையை ஏடாகவும் தம் தந்தங்களுளொன்றை எழுத் தாணியாகவும் கொண்டு எழுதினுரென்பது வரலாறு.

முலைமேருவையே ஏடாக - கொங்கையாகிய மேருமலையை ஏடாகக் கொண்டு. உகிரே எழுத்தாணியாக - கைந்நகமே எழுத்தாணியாகக் கொண்டு.

108. வேள்மைப் பாரம்பூசல் - மன்மதன் நடத்தும் குற்றம் பொருந்திய பெரிய காமப்போர். செப்பீர்-நீர் கதையைச் சொல்லுவீராக.

109. நயப்படுமுத் தால்கவிழ்த்து நாவான கையால்
இயக்கிவிழிச் சேல்பிடிக்க எய்தீர்—மயல்கடலில்

110. பாய்விரித்தே அல்குற்சம் பானேறிச் சம்போகத்
தீவிற்கா மச்செட்டுச் செய்தாலோ—பாவை நல்லீர்

111, பாத்திர நீர் நட்டுவன் நான் பைந்தரளங் கொள் துகிலின்
மாத்திரையை நீக்கியிங்கு வந்தாடீர்—பார்த்தும்மை

112. நச்சிஆ கம்தளர்ந்த நான்மருவ வேஉம்வாய்ப்
பிச்சை அருளினுல் பிழையாமோ?—மெச்சவே

113. காணரிய மாசுவர்க்கம் காட்டீரேன் ருல்பஞ்ச
பாணன்கை சேர்த்திடஏன் பண்ணுவீர்?—வாணுதலீர்

114. தென்மாரு தக்கொழுந்தும் செவ்வந்தி யும்கண்டீர்
என்மோக மாலையை நீர் ஏன்காணீர்?—துன்மாரன்

---

109. நயப்படு - விரும்பத்தக்க. முத்தால் கவிழ்த்து - மூன்று பனை ஓலைகளைக் கவிழ்த்து; முத்தமிட்டுக் கவிழ்த்து என இரு பொருள் கொள்க. நாவான கையால் இயக்கி விழிச்சேல் பிடிக்க - நாவினுல் விழிகளை வருடும் செயல் இங்குக் குறிக்கப்படுகின்றது.

110. அல்குற்சம்பான் - அல்குலாகிய தோணி. காமச்செட்டு - காமவின்பத்தைக் கொள்முதல் செய்தல்.

111. பாத்திரம் - நாடக பாத்திரம். நட்டுவன் - நாடகப் பாத்திரத்தை இயக்குபவன். பைந்தாளங் கொள் துகிலின் மாதிரை - முத்து வேலைப்பாடமைந்த துணியினுலாகிய பெரிய திரை. (ஆடையை அகற்றுவீர் என்பது குறிப்பு.)

112. நச்சி - விரும்பி. ஆகம் - உடல். வாய்ப்பிச்சை - வாயெச்சில். வாய்ச்சொல்லுமாம்.

113. பஞ்சபாணன் - மன்மதன். உமது கூட்டுறவென்னும் சிறந்த வானுலகின்பத்தை நாடிவந்த என்னை மன்மதனிடம் காட்டிவிடுதல் நீதியோ?

114. தென்மாருதக் கொழுந்து - தென்றலிளங்காற்று. செவ்வந்தி - சிவந்த மாலைவேளை; ஒருவகைப் பூ.

தென்றலும் மாலையும் காதலர்க்குத் துன்பஞ்செய்வன. துன்மாரன் - கெட்ட மன்மதன்.

115. பேதமறக் கூட்டிஅருள் பித்தனையே காட்டென்றால்
வேதனையேன் காட்டி மெலிவிப்பீர்?—மாதரீர்

116. தெள்ளியதோர் ஞாயிறுபோல் திங்கள்எழுந் தால்செவ்வாய்
வெள்ளியதா கப்பருக வேண்டாவோ?—ஒள்ளியதோர்

117. வாரத்தை யான்கேட்க மாதத்தை ஏன்தந்தீர்?
ஆரத் தனத்தோர் டணைந்தருளீர்—காரிகையீர்

118. நற்கைப் பணத்தையிட்டிந் நாளெனைக்கொள் ளாமல்வேள்
விற்கைக் கிலக்காய் விடலர்மோ?—பொற்கனகத்

---

115. பேதம் - மனக்குழப்பம் - மன்மதனால் உண்டாகும் மனக் குழப்பம். வேதனை - பிரமனை; துன்பம்.

மன்மதனால் ஏற்பட்ட மனவேறுபாட்டை நீக்கச் சிவனைக் காட் டென்றால் வேதனையல்லவா காட்டி மெலியச் செய்கின்றீர்.

116. காதலர்க்குத் தண்ணிய திங்களும் ஞாயிறுபோல் சுடும். எனவே, அக் காதல் வேட்கை தீருமாறு முயங்க வேண்டாவோ என்றபடி.

செவ்வாய் வெள்ளியதாக - சிவந்த இதழ் வெளுக்குமாறு. பருகல் - அதரபானம் செய்தல்.

ஞாயிறு, திங்கள், செவ்வாய், வெள்ளி என்னும் நயம் காண்க.

117. வாரம் - அன்பு. மாதத்தை - பெரிய மனக்கவலையை. தத்து- கவலை. வாரம், மாதம் என்னும் நயம் காண்க.

இங்கு,

"யாமெடுத்த தோத்திரங்கண் டின்பப்பள் ளிக்குவந்தால்
சோமனைக்கண் டங்கியெனச் சொல்வேனோ"

என ஒரு கண்ணி வேறொரு படியிற் காணப்படுகிறது.

118. பணம் - பொருள், பாம்பின் படம். பாம்பின் படம் அல்கு லைக் குறித்தது.

வேள், விற்கைக்கு - மன்மதன் விற்பனை செய்வதற்கு; வில்லை யேந்திய கைக்கு. பொன்கனகம் - அழகிய பொன்.

119. தூய்ய சுணங்கு சொரிகுரும்பை மீதிலே
செய்ய திரைமணியைச் சேர்க்கவோ?—மெய்யாய்

120. அறுபதமே நான் அகற்றி அந்தார் மலரோடும்
குறைவறமுப் பூசனையும் கூட்டவோ?—பிறைநுதலீர்

121, செப்பரிய ஓலை சிறப்பாகச் சேர்த்துநான்
அப்பெரிய காதை அளக்கவோ?—முப்பொழுதும்

122. நம்காம நூல்படிக்கும் நச்சுவடிக் கண்களுக்குச்
சிங்கார மையிடவோ? சேயிழையீர்,—பொங்கமுள்ள

123. பாரத் திரைமணியால் பட்டாடையால் அல்குல்
தேருக் கலங்காரம் செய்யவோ?—நேருற்ற

---

119. சுணங்கு - அழகுத்தேமல். குரும்பை - தென்னங் குரும்பை போன்ற அழகிய மூலை. திரைமணி - கடல்மணியாகிய முத்து. மூலை மீது முத்துமாலை யணியட்டுமா என்பது பொருள்.

120. அறுபதம் - வண்டு. முப்பூசனை - மூவகைப் பூசு பொருள். மூன்றுவகை வழிபாடு - மனத்தால் தியானித்தல், வாயால் துதித்தல், மெய்யால் வழிபடுதல்.

இங்கு,

''அஞ்சக் கொடுமால் அகங்காட்டுங் கைகளுக்கு
வஞ்சமற வேலைகள் வைக்கவோ''

என ஒரு கண்ணி வேறொரு படியிற் காணப்படுகின்றது.

121. காதை அளக்கவோ - காதினிடம் சேர்க்கவோ என்னும் ஒரு பொருளும் ஓலையில் கதையை எழுதவோ என்னும் ஒருபொருளும் பயத்தல் காண்க.

122. நச்சுவடிக்கண்கள் - நஞ்சு தோய்ந்த மாவடுவனைய கண்கள்.

ந சுவடிக்கண்களுக்கு மை இடவோ என்பது நல்ல சுவடியின் வரிகளுக்கு மையிடவோ என்னும் பொருள் தருதலறிக. ஓலைச்சுவடிக்கு மையிடுதல் மரபு.

123. பாரத்திரை - பெரிய கடல். நேருற்ற - செவ்விதின் அமைந்த.

124. செம்பொற் சரணத் திருக்கமலம் தாங்கவோ
வம்பொற் சிலையை வளைக்கவோ—நம்பால்

125. வழிந்த இதழ்ப்புதுத்தேன் வந்தாரப் பண்டைப்
பழந்தேனை முன்னே பருகவோ? —செழுந்தாளில்

126. சேவிக்க வோவிழவோ திண்கவரி வீசவோ
பாவிக்கோர் ஊழியத்தைப் பாலிப்பீர்—ஆவிக்குள்

127. தேனே மயிலே திருவே மணிக்கொம்பே
மானே'' எனப்போய் வணங்கினேன்—ஏனோதான்

128. ஆற்று வசனத்து அடங்காத நாகம்போல்
போற்றியசொல் கேளாமல் போயினர்—கோற்றொடியார்

தலைவனின் பிரிவாற்றுமை

129. பின்கண்டேன்; ஒப்பாகப் பின்னைக்கா ணேன்; பின்கா
மன்கண்டேன்; வெஞ்சாபம் வாங்கினன்—என்கண்டோ

130. தன்கா தலையளித்த தையலைப்பார்த் தேனென்றே
என்கா ரியங்காண எண்ணினன்—பைங்காவில்

---

124. அம் பொற்சிலையை வளைக்கவோ - அழகிய பொற்சிலை போன்ற உடலைக் கட்டியணைத்துக் கொள்ளட்டுமா? நம்பால்.

125. வந்தார - வந்து நிறைய. பழந்தேன் - பழமும் தேனும்.

126. ஊழியத்தைப் பாலிப்பீர் - தொண்டு செய்யும் வாய்ப்பை அளிப்பீர்.

128. ஆற்றுவசனத்து - மந்திரமல்லாத வெற்றுரைக்கு, அடங்காத நாகம்போல் - கட்டுப்படாத பாம்பினைப்போல். கோற்றொடி - அழகிய வளையல்.

129. பின்கண்டேன் - பின்னழகைக் கண்டேன். ஒப்பாகப் பின்னைக் காணேன் - அவ்வழகிற்கொப்பான வேறொருவரைக் காணேன். பின் காமன்கண்டேன் - பின் மன்மதனைக் கண்டேன்.

130. தன் காதலை யளித்த தையல் - மன்மதனுகிய தனக்கே காதலைத் தோற்றுவித்த பேரழகியாகிய பெண்.

131. கோட்டுப்பூ நீர்ப்பூ கொடிப்பூவெல் லாந்தொடுத்து
நாட்டுப்பூ வுள்ளவெல்லா நாட்டினுன் —மீட்டுப்பூப்

132. பார்த்தான் முகைகாணுன் பத்திரத்தில் கைவைத்தான்
ஆர்த்தான் விழுந்தேன் அயர்ந்திட்டேன் —வேர்த்தாகம்

133. வம்பருத் தூணி மலர்ப்பாண மேனிரம்ப
அம்பருத் தூணிபோ லாயினேன் — கொம்பில்

134. கருங்கோ கிலங்கூவக் கண்ணிலுறும் புண்ணூடே
அருங்கோல் நுழைந்ததுபோல் ஆனேன்—மருங்காக

135. வாய்த்திட்ட தென்றல் வரக்கண்டு சாகாமல்
கோத்திட்ட மீன்போல் குறைந்திட்டேன்—பூத்தங்கு

136. எழுந்தமதி கண்டங்(கு) இடையில் குறைக்க
விழுந்தமர மொத்தேன் வினையேன்—முழுங்கிச்

137. சிறந்தகடல் ஆர்ப்பச் சிறந்த கடலூடே
பறந்திடுகா கம்போல் பறந்தே—திறந்தகூர்

---

131. கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புதர்ப்பூ எனப் பூ நான்கு வகை. நாட்டுதல் - நிலைபெறச் செய்தல்.

132. முகைகாணுன் - வேறு அரும்பு காணுன். பத்திரத்தில் கை வைத்தான் - பத்திரம் - வாள் - இலையிற் கைவைத்தான் என்னும் நயங் காண்க.

133. வம்பரு மலர்ப்பாணம் - மணம் நீங்காத மலர்க்கணை. அம்பருத் தூணிபோல் ஆயினேன் - என் உடல் முழுதும் அம்புகள் ஏறுண்டு நான் அம்பருத்தூணியானேன் என்பது பொருள்.

134. கொம்பில் கருங்கோகிலம் - மரக்கிளையில் கரிய குயில். கோல் - அம்பு.

135. கோத்திட்டமீன் - கயிற்றில் கோக்கப்பட்ட மீன் - உயிர் துடிக்கும் நிலையினதாகும். அதுபோல் ஆனேன். பூத்து - மலர்ந்து.

136. குறைக்க - வெட்ட.

137. கடலூடே பறந்திடு காகம் தங்குமிடம் காணமாட்டாமல் அலைதல் போன்று அமைதியின்றித் தவித்தேன்.

138. ஏங்கிட் டலரும் இருதலைக் கொள்ளிக்குள்
வேங்கட் டெறும்புபோல் வெம்பினேன்—பாங்கன்

139. எடுத்தான் அணைத்தான் இயல்பாய் முளரி
படுத்தான்; அணைமேல் படுத்தேன்—தொடுத்தநிலை

140. பேர்ந்தேன்; அயர்ந்தேன்; பிழைபெற்றுச் செய்கையெலாம்
சோர்ந்தேன்; மறந்தேன்; துயில்கொண்டேன்—சேர்ந்த

கனவிற் காணுதல்

141. கொலைக்காரி யாஎன்னைக் கொல்லாமல் கொன்ற
கலைக்காரி யைக்கனவில் கண்டேன்—நிலைக்காதல்

142. சொல்லிப் பரதவித்துத் தொழுதுமோ கக்கள்ளாம்
முல்லைத் திருநகைக்கு முன்னின்றேன்—"நல்லசெவ்வி

143. ஆகத்தைத் தாரீர்நீர் ஐயோ அடித்தலைமேல்
மோகத்தை ஏன்தந்து முன்னின்றீர்?—சோகத்தால்

144. மால்கொண்டு வந்தவரை வாழ்வியா மல்நயன
வேல்கொண்(டு) எறிந்தபழி வீண்போமோ?--பால்கொண்ட

---

138. இருதலைக் கொள்ளிக்குள் வேம் கட்டெறும்பு - 'இருதலைக் கொள்ளியினுள்ளெறும் பொத்து' என்னும் திருவாசக அடி ஒப்பு நோக்கத்தக்கது. ஏங்கிட்டு - ஒலிசெய்து. அலரும் - விளங்கும். வேம் - வேகும். பாங்கன் - தோழன்.

139. முளரிபடுத்தான் - தாமரை மலர்களை விரப்பினன். அணை - மெத்தை.

140. நிலைபேர்ந்தேன் - நிலைதவறினேன். செய்கையெலாம் சோர்ந்தேன் - செயலற்றேன்.

141. கொல்லாமல் கொன்ற கலைக்காரி - வெளிப்படையாகக் கொல்லாமல் செயலற்ற நிலைக்காளாக்கும் கலைவல்லவள்.

142. மோகக்கள் - ஆசையை வளர்க்கும் கள். செவ்வி - அழகு.

143. அடித்தலைமேல் - அடிமுதல் முடிவரையும்.

144. மால் கொண்டு வந்தவர் - ஆசையாக வந்தவர் - மயக்கங் கொண்டு வந்தவர். நயனவேல் - கண்வேல்.

145. சொல்லியரே என்மாலை தோளணிந் தேகருப்பு
வில்லியார் தம்மை விலக்கிடீர் —செல்லுறையும்

146. மட்டாரும் பூங்குழலீர் வாலிபம்போ னல்பின்னே
கிட்டா தெனும்வார்த்தை கேளீரோ? தொட்டபெருங்

147. கோபத்தைப் போடீர்பைங் கோபத்தைத் தாரீர்என்
தாபத்தைத் தீரீர் தளர்வகற்றீர்—வீபத்து

148. மல்குகின்ற என்றன் மதிவிழுங்கும் பாம்பைநீர்
அல்குலென்று கொண்டிருக்க லாமோ?—நல்லவர்நீர்"

149. என்றேன்; நகைத்தார்; இடமிதுவே என்றுநான்
சென்றேன்; திருமேனி தீண்டினேன்—ஒன்றுடலாய்

150. அவ்வேல் விழியார் அனுராக மேதந்தார்!
வெவ்வேடை கொண்டயான் விட்டேனே—செவ்வி

151. மடிக்குள் இருத்தி மடித்த சுருள்கள்
கடித்த இதழ்சுருள் கண்டு—விடுத்து

---

145. பால் கொண்ட சொல்லியர் - பால்போல் இனிக்கும் சொல்லை யுடையீர். கருப்பு - கரும்பு - கருப்பு வில்லியார் - மன்மதன். செல் - மேகம்.

146. செல் உறையும் மட்டு ஆரும் பூகுழலீர் - மேகத்தை ஒத்த தேன் பொருந்திய பூச்சூடிய கூந்தலையுடையீர். தொட்ட - எடுத்த.

147. பைங்கோபம் - (அழகிய துகில்) இந்திரகோபப் பூச்சியினை யொத்துச் சிவந்த இதழ். தாரீர் - அமுதம் அருந்தத் தாரீர். தாபம் - காம வேட்கை. வீபத்து - விபத்து, துன்பம்.

148. மதி விழுங்கும் பாம்பு - மதியை மயக்கச் செய்கின்ற பாம்பு. பாம்பு பார்வையால் மயக்கும். மதி விழுங்கும் பாம்பு என்பதில் சந்திரனை விழுங்கும் பாம்பு என்ற நயம் காண்க. நல்லவர் நீர் - கொடியவர் என்பது குறிப்பு.

149. நகைத்தார் இடம் இதுவே என்று நான் சென்றேன்-முறுவற் குறிப்புணர்ந்து நெருங்கிச் சென்று மெய்தொட்டுப் பயின்றேன். ஒன்று உடலாய் - இணைந்த உடலினராய்.

150. அனுராகம் - காமக்குறிப்பு. வேடை - காமநோய்.

151. மடிக்குள் இருத்தி - என் மடியில் அமர்த்தி.

152. வலக்கைக் குறிப்போடு வாரை நெகிழ்க்க
உலப்பில் இடக்கை உறைக்க—முலைக்குள்

153. முகத்தை இருத்தி முனைப்பல் அழுத்தி
அகத்தை உரைக்க அழுத்தி—மிகுத்த

154. சங்குடன் சிலம்புதண்டை சம்பிரமம் கலம்பகக்
குங்குமம் செறிந்திருந்த கொண்டைவிண்(டு)—அங்கம்

155. உடலும் உடலும் உயிரும் உயிரும்
அடைவில் அணையும் அளவில்—நடவயரும்

156. மெய்போல் கருதி விழித்தேன் விழிப்பளவில்
கையூ டிருந்தாரைக் காண்கிலேன்—உய்வகையாம்

தலைவன் புலம்பல்

157. வாழ்வுபெற்ற சம்பரன் வருகையிலே பாற்கடலில்
தாழ்வுபெற்று நிற்பார் தமைஒத்தேன்—மாழ்கிமிக

---

152. குறிப்பு - காமக் குறிப்பு. உறைக்க - அணைக்க.

153. அகத்தை உரைக்க அழுத்தி - உள்ளத்தை உரசுவதுபோல் அழுத்தி. ஆகத்தை உரைக்க அழுத்தி - மார்பினை உரசும்படி அழுத்தி என்றுமாம்.

154. சங்கு - வளையல். சிலம்பு, தண்டை என்பன காலணிகள். சம்பிரமம் - மகிழ்ச்சி; மகிழ்ச்சி யுற்றனபோல் ஒலிக்க. கலம்பகம் - மணக்கலவை. கொண்டைவிண்டு - கூந்தல் முடி நெகிழ்ந்து.

155. அடைவில் - முறையாக. நடவு அயரும் - கனவில் நடை பெறும். மெய்போல் கருதி - உண்மை நிகழ்ச்சியென்று எண்ணி.

156. கையூடு இருந்தாரைக் காண்கிலேன் - கையிடத்திருந்த நங்கையாரைக் காண்கிலேன்.

157. சம்பரன் என்பவன் தேவர்களுக்குப் பகைவனுகிய ஓர் அரக்கன். தயரதப் பெருவேந்தன் அச் சம்பரனைக் கொன்று தேவர்கள் துயர் போக்கினுன் என்பது கதை. பாற்கடல் கடைந்து அமுதம் கைக்குக் கிட்டும் செவ்வியில் சம்பரன் வந்துவிட்டால் தேவர்கள் எவ்வாறு ஏமாற்ற முறுவார்களோ அவ்வாறு ஏமாற்ற முற்றேன்.

158. வாடினேன் பூங்காவும் வாவிக்கரை உள்ளனபோய்த்
தேடினேன்; காணேன்; தியங்கினேன்—நாடியே

மடல் ஊர்வேன் எனல்

159. 'ஏம மடல்அல்ல(து) இல்லைவலி' என்றுரைத்த
தேமருவு வள்ளுவர்சொல் தேறினேன்—காமன்எனும்

160. தெய்வத்தை வாழ்த்திச் சிறக்கும் பனைவெட்டி
உய்விக்கும் சித்திரமடல் உண்டாக்கி,—நைவிக்க

161. வல்லாளைக் கொங்கையெனும் வல்லாளை நெஞ்சமெனும்
கல்லாளை வஞ்சமொன்றும் கல்லாளைப்—புல்வாயின்

162. கண்ணுளைப் பூங்குவளைக் கண்ணுளை என்னை இதம்
பண்ணுளைச் சொல்விளகும் பண்ணுளை—எண்ணியெனத்

---

158. வாவி - குளம். தியங்கினேன் - சோர்ந்தேன்.

159. ஏமம் - காவல். தே மருவு வள்ளுவர் - தெய்வத்தன்மை பொருந்திய திருவள்ளுவர்.

'காமம் உழந்து வருந்திளுர்க் கேமம்
மடலல்ல தில்லை வலி'

என்பது திருக்குறள்.

(159 முதல் 174 முடியவுள்ள கண்ணிகள்-தலைவன் மடலேறத் துணிவதைக் கூறுகின்றன.)

160. சிறக்கும் பனை - செழித்த பனை. சித்திர மடல் - அழகிய மடல். பனைமரத்திலிருந்து அழகிய மடல்களை ஒழுங்கு செய்துகொண்டு என்பது பொருள். பனைமடலால் செய்யப்பட்ட குதிரை கருவியாகு பெயராக மடலென்னும் பெயர் கொண்டது. நைவிக்க - வருத்த முண்டாக்க.

161. கொங்கை யென்னும் வல்லாள் - கொங்கை யென்று சொல்லப்படுகின்ற சூதாடு கருவிகளுடையாள். வல் - சூதாடுகருவி. நெஞ்சமெனும் கல்லாள் - கல் போன்ற நெஞ்சமுடையவள். வஞ்சம் ஒன்றும் கல்லாள் - வஞ்சம் பொருந்தியவளாய் நல்லன கல்லாதவளாகவுள்ளாள். புல்வாய் - மான்.

162. இதம் பண்ணுள் - இன்புறுத்தாதவள்.

163. துப்பாளை வண்ண இதழ்த் துப்பாளை சண்பகப்பூ
வைப்பாளை மைக்குழலில் வைப்பாளைத்—தப்பாமல்

மடற் கோலம்

164. கேவித்த பாதாதி கேசத்தை யும்எழுதி
ஊவிக்கும் சித்திரமடல் உண்டாக்கி,—கோவித்துச்

165. சாடிப் பொருதுவெல்லும் சங்கிராமத் துள்புகுந்தங்(கு)
ஈடுற்ற மெய்யில் எலும்பெடுத்துச்—சோடித்துப்

166. பூண்ட எருக்கணிந்து பூர்ணப்பே ரானந்தத்
தாண்டவனைப் போலே தலைப்பட்டு—"மாண்டமதன்

167, பாங்காம் சமயபரி பாலன்என்ன வந்தான்;
வாங்காவெம் காமுகர்கோ மான்வந்தான்—பாங்கான

168. மங்கையர்வே ளைக்காரன் வந்தான்வந் தான்" என்றே
அங்கு வளைச்சின்னம் ஆர்ப்பெடுப்ப—எங்கும்

---

163. துப்பாள் - நுகராதவள். இதழ் துப்பாள் - இதழாகிய ப[illegible] முத்தினை யுடையாள்.

சண்பகப்பூவை பாளை மைக்குழலில் வைப்பாளை - சண்பகப் பூவை[illegible] யும் தென்னம்பாளையையும் கரிய குழலிற் சூடுபவள். தப்பாமல்-ஒரங்[illegible] விடாமல்.

164. கேவித்த - தம் அழகால் என்னை வருந்துமாறு செய்[illegible] ஊவிக்கும் சித்திரம் - கற்பனையாக எழுதிய ஓவியம். அடையாளமா[illegible] எழுதப்படும் ஓவியம் ஆதலின் கற்பனை ஓவியம் எனப்பட்டது.

165. சங்கிராமம் - போர். ஈடுற்ற வீரமரண மடைந்து பெரு[illegible] யுற்ற. மெய்யில் - வீரனது உடம்பில்.

166. ஆனந்தத் தாண்டவன் - சிவபெருமான். தலைப்பட்டு[illegible] தொடங்கி.

167. சமய பரிபாலன் - சமயங்களைப் பாதுகாப்பவன். பாங்கா[illegible] சமயம் - நன்மையான மதம். (மன்மதனே உருப்பெற்று வந்தா[illegible] போன்ற அழகிய தோற்றத்தினன்) காமுகர் கோமான் - காமவி[illegible] பந்தருவதில் தலைசிறந்தவன். வாங்கா - குறையாத.

168. வேளைக்காரன் - படைஞன், வீரன் - மங்கையரை மன்மத[illegible] போரில் காக்கும் வீரன். வளை - சங்கு. சின்னம் - காளவாத்தியம்.

169. தனக்கொப் பிலாதான் தனக்குவமை எய்த
எனக்கும் பெரும்புகழே ஏறச்—சினக்கலியை

170. மாற்றும்தெய் வங்கபெரு மாள்மண்ட லீகரனைப்
போற்றும்பா வையிலே போயேறி,—நேற்றெனக்கு

171. நின்றேங்கா மல்ஒளித்த நீலிவந்து முன்னேற
மன்றேறி மோக மதமேறி—இன்றேதான்

172. கன்மாரி பெய்திடினும், காலலைத்து வீசிடினும்
வன்மா கரியலைத்து வாங்கிடினும்,—பன்முறையாய்ப்

173. பின்னுமுன்னும் நாகம் பிடித்துக் கடித்திடினும்,
அன்னிலையில் சற்றும் அசையாமல்,—சென்னி

174. தியங்காமல், தூங்காமல், செவ்வி நலியாமல்,
மயங்காமல், ஊர்வேன் மடல்.

---

169. சினக்கலி - வெறுத்தற்குரிய கலிகாலக் கொடுமை.

170. தெய்வங்க பெருமாள் - பாட்டுடைத் தலைவன் பெயர். இது 'தெய்வங்கள் பெருமாள்' என்றிருப்பினும் யாப்பிற்கிழுக்கில்லை. புற னடை விதியால் ஏற்கப்படும். பாவை - பாட்டுடைத் தலைவனது ஊர்.

171. நின்று ஏங்காமல் - என் எதிரில் நின்று என்னை விரும்பாமல். நீலிவந்து முன்னேற - நீலியாகிய அப் பெண் என் முன்னே தோன்று மாறு. மடலேறினால், தலைவியின் பெற்றோர் தாமே அவளைத் தலைவ னிடம் ஒப்படைத்தல் வேண்டுமென்பது மரபு, மடலூர்ந்து வருங்கால் உடம்பிலிருந்து இரத்தம் வெளிப்படாமல் விந்துநீர் வெளிப்படின் அங்ஙனம் செய்வர் என்பது வழக்கு.

172. கன்மாரி - கல்மழை. கால் அலைத்து வீசல் - காற்றுச் சுழன்று வீசுதல் (சுழல்காற்று). வன்மா கரி - வலிய பெரிய யானை. அலைத்தல் - வருத்துதல்.

173. நாகம் பிடித்துக் கடித்திடினும் - பாம்பு பற்றிக் கொண்டு கடித்தாலும். அந்நிலை என்பது எதுகையின் பொருட்டு அன்னிலையென வந்தது. சென்னி - தலை.

174. சென்னி தியங்காமல் - தலை தாழ்த்தாமல். தூங்காமல் - சாம்பியிராமல். செவ்வி நலியாமல் - இயல்பு கெடாமல். மயங்காமல்- மயக்கம் கொள்ளாமல். மடல் ஊர்வேன் - மடல் ஊர்பவன் ஆவேன்.

மதுரை மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலையும் திருவடிப்பத்தும்

— குறிப்புரையுடன் —

ஆசிரியர் :

சோழவந்தான் அரசஞ்சண்முகனார்

அரசஞ் சண்முகனார் அவர்கள் மதுரை அங்கயற்கண்ணம்மைமீது பாடிய 32 சந்தப் பாக்களைக் கொண்டது இந் நூல். பாக்கள் திருப்புகழ்ச் சந்தப் பாக்களைப்போல் சுவைபட எழுதப் பட்டுள்ளன. இப் புலவர் பெருமான் இளமைப் பருவத்தில் இயற்றிய திருவடிப்பத்து என்னும் பத்து வெண்பாக்கள் இந் நூலின் பிற்பகுதியாக அமைந்துள்ளன.

விலை ரூ. 3-75.